களை விட்டுவிட்டு வேறு ஆட்களை வைத்து அறுவடை செய்ததற்காக உரிமைக்குரலை நியாமான முறையில் எழுப்ப வேண்டியதற்குப் பதிலாக வைக்கோல் போருக்குத் தீ வைத்ததுதான் தகாத காரியம். அவர்கள் தீ வைத்தது தகாத காரியம் என்றாலும், அதற்குப் பதிலாக நடவடிக்கை எடுக்கச் சட்டம் இருக்கிற நேரத்தில் அதற்கு மாறாக அரிசன வீடுகளுக்கு தீ இட்டது பெரும் குற்றம். ஆகவே, இப்படி மாறி மாறி—போலீஸ், சட்டம் இருக்கிறது, அவர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள், என்ற அளவுக்கு நிலைமைகளை அவர்கள் விடாமல்—தங்களுக்குத் தாங்களே தீர்ப்பளித்துக் கொள்ள முயலுவது நல்லதல்ல என்பதையும் இந்த நேரத்திலே விளக்கிக்கொண்டு, இது அரசினுடைய அன்றாட அலுவல்களிலே வருகின்ற காரணத்தினால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு ஏற்றதல்ல என்கின்ற கருத்தையும் அறிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசினுடைய அன்றாட நிகழ்ச்சிக்கு உட்பட்டது. மேலும் அரசு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆகவே, இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(அ) சென்னை மாநகரில் ஏற்படவிருக்கும் கடும் தண்ணீர்த் தட்டுப்பாடு.

THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Sir, I call the attention of the Hon. Minister for Health and Harijan Welfare to a matter of urgent public importance, namely, the grave water shortage likely to arise in Madras city this year.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகருக்குத் தேவையான குடிநீர் புழலேரி, சோழவரம், பூண்டி ஆகிய இடங்களிலுள்ள நீர்த்தேக்கங்களிலிருந்து பெறப்படுகின்றது. இம் மூன்று நீர்த்தேக்கங்களில் மொத்தச் சேமிப்புக் கொள் அளவு 559.6 கோடி கன அடியாக இருந்தபோதிலும், பயனுறு சேமிப்புக் கொள் அளவு 507.9 கோடி கன அடிமட்டுமே ஆகும். இம் மாநகரிலுள்ள சுமார் 20 லட்சம் மக்களுக்காக நாள்தோறும் சுமார் 3.853 கோடி காலன் நீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு வடகிழக்குப் பருவமழை தவறியதன் காரணமாக, 27—1—69 தேதியன்று உள்ளபடி, மூன்று நீர்த்தேக்கங்களிலும் சேர்ந்து நீர் அளவு சுமார் 400 கோடி காலன்மட்டுமே இம் மாநகருக்குக் குடிநீர் வழங்க இருந்தது. இது நாளொன்றுக்கு 3 கோடி காலன் என்ற வீதத்தில் 1969 ஜூன் 15-ம் தேதிவரை மட்டுமே போதுமானதாகும். எனவே, வழங்கப்படும் குடிநீர் அளவைக் குறைப்பதும், இந்த நெருக்கடி சமாளிக்கப்படும்

வரையில் புதிய வீட்டுக் குழாய் இணைப்புகள் கொடுப்பதற்குத் தற்காலிகமாகத் தடை விதிப்பதும் தவிர்க்க முடியாததாகிறது. பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிற குடிநீர் அளவினை மாநகராட்சி ஏற்கனவே குறைத்துவிட்டது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு நில அடிமட்ட நீர்வளங்களிருந்து புழலேரிக்கு நீர் அனுப்பப்படும் அளவினைப் பெருக்கவும் திட்டமிடப்படுகிறது.

சோதனைக் காரியங்களுக்காக அய்யலச்சேரிப் பகுதியில் நில அடிமட்ட நீர்வளக் குழுவினரால் 80 முதல் 150 அடி வரையில் பல்வேறு ஆழங்களில் இறக்கப்பட்ட 10 துளைக் கிணறுகள் உள்ளன. இத்தகைய கிணறுகள் ஒவ்வொன்றிலிருந்தும் நாளொன்றுக்கு 16 மணி நேரங்களில் நிமிடத்திற்கு 500 காலன் நீர் அதாவது மொத்தத்தில் நாளொன்றுக்கு 48 லட்சம் காலன் நீர் கிடைக்கலாம். இத்திட்டத்தின் முதல் கட்டமாக இத்தகைய கிணறுகளிலிருந்து நீரை இறைத்துத் திறந்தவெளி புழலேரியில் சேருகின்ற திறந்தவெளிக் கால்வாய்க்கு அனுப்பவும் கருதப்படுகிறது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக, ஒவ்வொரு கிணற்றிலிருந்தும் 16 மணி நேரங்களில் நிமிடத்திற்கு 500 காலன் வீதம் நாளொன்றுக்கு சுமார் 86 லட்சம் காலன் நீர் எடுத்துப் புழலேரியில் சேமித்து வைக்கும் வகையில் அய்யலச்சேரிப் பகுதியில் கூடுதலாக, 18 துளைக் கிணறுகள் இறக்கவும் கருதப்படுகிறது. தாமரைப்பாக்கம் பகுதியிலிருந்து கிடைக்குமென எதிர்பார்க்கக் கூடிய நிகர நீர் அளவு நாளொன்றுக்கு 70 லட்சம் காலன் ஆகும்.

சென்னை உரத்தொழிற்சாலைக்கு நீர் வழங்குவதற்காகப் போடப்பட்ட பஞ்சட்டி ஊற்றுநீர்த் தேக்கங்களிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 60 லட்சம் காலன் நீர் தற்காலிகமாக எடுத்து, 1969 அக்டோபர் வரை மாநகரக் குடிநீர் வசதியைப் பெருக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1969 அக்டோபருக்குப்பின் இந்த நீர் உரத் தொழிற்சாலைக்கு வழங்கப்படும்.

மேற்சொன்ன ஏற்பாடுகளின் வாயிலாக, இம்மாநகருக்கு நீர் வழங்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. மேற்சொன்ன செயற்குறிப்புகளை நிறைவேற்றுவதற்காக ரூ. 37.10 லட்சம் செலவில் திட்டமொன்றுக்கு இவ்வரசு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பொதுப்பணித்துறையைச் சேர்ந்த நில அடிமட்ட நீர்வளக் குழுவினரால் இப்பணி செய்து முடிக்கப்படும்.

(ஆ) கிரகாம் (சிவகாசி) பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தும், உயிர் சேதமும்.

THIRU N. S. V. CHITHAN : Sir, I call the attention of the Hon. the Minister for Labour to a matter of urgent public importance, namely the fire accident at Sivakasi Cracker Factory about the 4th January 1969 resulting in the death of a number of people.